திலேயோ எந்த கடலோரப் பகுதிகளிலேயோ மீன்பிடித் துறைமுகம் கட்ட வேண்டும் என்றால், மத்திய அரசாங்கத்தினிடம் அனுமதி பெற வேண்டிய நிலைமைதான் மாநில அரசுகளுக்கு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொந்தச் சலுகைகளைப் பயன்படுத்தி மத்திய அரசாங்கத்திடம் சொல்லி இத் திட்டத்தைத் தொடங்குவதற்குத் தேவையான நிதி உதவியை சீக்கிரத்தில் பெற்றுத்தந்தால், அந்த இடத்தில்மீன்பிடித் துறைமுகத்தை ஆரம்பிக்க அரசு எல்லா முயற்சிகளையும் செய்யும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மீன்பிடித்துறைமுகங்களை கட்டுவதற்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து எந்த அளவுக்கு என்னென்ன விதத்தில் உதவிகள் பெற வேண்டும். இதுவரை எத்தனை மீன்பிடித் துறைமுகங்கள் கட்டியதாக உள்ளது.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆரம்பத்தில் 1966-67-ல். எந்த மாநிலத்தில் மீன் பிடித் துறைமுகம் அமைப்பதாக இருந்தாலும் அதற்கு ஏற்படுகிற செலவில் பாதி செலவை மாநில அரசும் பாதி செலவை மத்திய அரசும் ஏற்றுக் கொள்வது என்று முடிவு எடுத்து அதன்படி நிறைவேற்றப்பட்டு வந்தது. அதற்குப் பிறகு 1966-67-ம் ஆண்டிக்குப் பிறகு 1979 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரைக்கும் மீன்பிடித்துறைமுகத்திற்கான செலவை எந்த மாநில அரசு அமைத்தாலும் அதற்கான முழு செலவையும் மத்திய அரசே ஏற்றுக் கொள்வது என்று முடிவு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டு வந்தது. ஆனால் 6-வது ஐந்தாண்டு திட்டத்தில் 50 சதவீதம் செலவை மாநில அரசும், 50 சதவீதம் செலவை மத்திய அரசும் ஏற்றுக்கொள்வது என்று இந்த 6-வது ஐந்தாண்டு திட்டத்தில் முடிவு எடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் எத்தனை துறைமுகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று புள்ளி விவரம் கேட்டிருக்கிறார்கள். அதற்கான தனிக்கேள்வி போட்டால் விவரங்கள் கேட்டு தருகிறோம்.

திரு. ரா. கு. பெருமாள் : மூக்கையூர் பக்கத்தில் வேம்பாறு, வைப்பாறு, சிப்பிகுளம், தருவை போன்ற இடங்களில் 5,000-க்கு மேற்பட்ட மீனவர்கள் வாழ்கிற பகுதியில் அங்கு ஓர் மீன்பிடித் துறைமுகம் கட்ட வேண்டும் என்று நான் பலமுறை மனு கொடுத்திருந்தும் அதற்கான நடவடிக்கைகள் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே, அது எந்த நிலையில் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொகுதியில் உள்ள வேம்பாறு, கீழ் வைப்பாறு போன்ற பகுதியில் மீன்பிடி துறைமுகம் அமைக்க வேண்டும் என்று சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் நீண்ட காலமாகவே ஒரு கோரிக்கையை எழுப்பி வருகிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கான பரீட்சார்த்தகரமான நேர்வுகள் முடிந்த பிறகு தேவை இருப்பின் அங்கு கட்ட சாத்தியக்கூறுகள் இருக்குமானால் மைய அரசுக்கு அது நிச்சயமாக சிபாரிசு செய்யப்படும்.

கலைவாணர் அரங்கம்.

*வினா எண். 25—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலைவாணர் அரங்கில் சினிமா டிக்கட் விலை சமீபத்தில் உயர்த்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆமெனில் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) ஆம்.

(ஆ) அரங்கை நல்ல முறையில் பராமரிக்கும் செலவு அதிகரித்துள்ளதால் டிக்கட் விலை சிறிது உயர்த்தப்பட்டுள்ளது.

*வினா எண். 26—திரு. கே. பண்ணை சேதுராம் : மாண்புமிகு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கலைவாணர் அரங்கத்தில் தனியார்களுக்கு திரைப்படங்கள் திறையிட அனுமதிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எந்த விதி முறைகளின் கீழ் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) பட விநியோகஸ்தர்கள் அரசு விதிக்கும் ஒப்பந்த நிபந்தனைகளுக்குட்பட்டு படங்களைத் திரையிடுகின்றனர்.

1980 பிப்ரவரி 4]

(ஆ) ஒப்பந்த நிபந்தனைகள் பின் வருமாறு :—

1. கலைவாணர் அரங்கின் அரசிதழ் பதிவுபெற்ற மேலாளரால் குறிப்பிட்ட காலத்திற்குள் திரைப்படம் திரையிடவேண்டும்.

2. மொத்த வசூலில் 35 சதவீதம் பட விநியோகஸ்தர்களுக்கும், 65 சதவீதம் அரசுக்கும் சேரும்.

3. சுவரொட்டிகளை பட விநியோகஸ்தர்கள் வழங்க வேண்டும்.

4. பத்திரிகை விளம்பரச் செலவை அரசு ஏற்கும்.

5. தினசரி ஒரு காட்சிதான் நடத்த முடியும். அதையும் மேலாளர் விருப்பப்படி ரத்து செய்யவோ, அதிகரிக்கவோ உரிமை உண்டு.

6. காவலர் பாதுகாப்புச் செலவுகளை விநியோகஸ்தர் ஏற்க வேண்டும்.

7. இத் தொழிலுக்குப் பொருந்தும் மற்ற விதிகளை, ஒழுங்கு முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணன் : முன்பு 'சில்ரன்ஸ் தியேட்டர்' என்று அறிவு வளர்ச்சிக்காக அந்த தியேட்டர் கட்டப்பட்டு திரைப் படங்கள் காட்டப்பட்டன. ஆனால் இப்போது அங்கு வியாபார நோக்கோடு திரைப் படங்கள் காட்டுவது சரியல்ல. ஆகவே, அறிவு வளர்ச்சிக்காக அங்கே திரைப்படங்கள் காட்ட ஏற்பாடு செய்யப்படுமா ? மேலும் இருக்கக்கூடிய இடங்களைவிட அதிகமாக டிக்கட்டுகள் வழங்கப்பட்டு டிக்கட்ஸ் வாங்கியவர்கள் தரையில் உட்கார வேண்டியநிலை இருக்கிறது, அதையும் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சிறுவர்களுக்காக அந்த அரங்கம் கட்டப்படவில்லை. சட்டமனறத்திற்காக கட்டப் பட்டது. அதைப் பயன்படுத்த முடியாத நிலையில் அது சிறுவர் திரையரங்கமாக மாற்றப்பட்டது. அதற்கு பிறகு சிறுவர் திரையரங்கத்தை மாற்றி அது புதுப்பிக்கப்பட்டு கலைவாணர் அரங்கமாக மாற்றப்பட்டது. சிறுவர்களுக்கு மட்டும் படங்கள் போடலாம் என்றால் அதற்கான படங்கள் இப்போது கிடைப்பதில்லை. தயாரிப்பிலும் இல்லை. அதையொட்டித்தான் அந்த விதிமுறைகளை மாற்றி யிருக்கிறோம். மேலும், அந்த அரங்கத்தில் எல்லோருக்கும் இருக்கைகள் வசதியாகத்தான் இருக்கிறது. ஆகவே, அதிகப்படியான டிக்கட்டுகள் கொடுக்கும்

பிரச்னை எழவில்லை. 1,040 இருக்கைகள் உள்ளன. அதைத் தான் அங்கு வழங்க முடியும். அது தவிர வேறு ஏதாவது குறைகள் இருப்பதாகக் குறிப்பிட்டுச் சொன்னால் அதை உடனடியாகக் களைய முயற்சி எடுக்கப்படும்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : இந்த கலைவாணர் அரங்கின மூலம் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்குக் கிடைக்கும் வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இதற்கான விடையை இதற்கு முன்பே நான் சட்டமன்றத்தில் தெரிவித்திருக்கிறேன். ஒரு ஐந்தாண்டுக் காலக் கணக்கு என்னிடம் இருக்கிறது.

1974—75-ல் ரூ. 5,559 லாபம் வந்திருக்கிறது.

1975—76-ல் ரூ. 47,253 லாபம் வந்திருக்கிறது.

1976—77-ல் ரூ. 46,804 நஷ்டம்.

1977—78-ல் ரூ. 9,558 லாபம்.

1978—79-ல் ரூ. 2,61,096 லாபம்.

[முற்பகல் 9-20]

திரு. சென்னை மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே,

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். கேள்வி கேட்கிறபோது, விவரங்களைத் தான கேட்க வேண்டும். உறுப்பினர் அவர்கள் தனிப்பட்டவர் ஒருவர் புண்படுகின்ற முறையில் கேள்வி கேட்கக் கூடாது. உட்காருங்கள்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதி இல்லை என்கிறேன். உட்காருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.